- Thamburaj, K. P., & Shakunthala, R. (2016). Standardization of question items to test tamil case markers-a study. *Asian Journal of Assessment in Teaching and Learning*, *6*, 9-16.
- Arumugum, L., Nadeson, B., & Thamburaj, K. P. (2021). Traditional teaching method-concept of moral education and pedagogy in Aathicuudi. *Muallim Journal of Social Sciences and Humanities*, 176-182.
- Thamburaj, K. P. (2021). E-Teaching in Teacher Education—A Conceptual Framework of Sultan Idris Education University. *Sino-US English Teaching*, *18*(5), 107-111.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2020). THE USE OF MOBILE-ASSISTED LANGUAGE LEARNING IN TEACHING AND LEARNING TAMIL GRAMMAR. *PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology*, *17*(10), 843-849.
- Thamburaj, K. P., Sivanadhan, I., & Kumar, M. (2021). IMPROVING FORM 4 STUDENT'S READING COMPREHENSION SKILLS IN TAMIL LANGUAGE BY USING SQ3R METHOD. *Psychology and Education Journal*, *58*(2), 2291-2295.
- Thamburaj, Kingston Pal. "A Process of Developing an ASR System for Malay and Tamil Languages." *Design Engineering* (2021): 731-741.
- Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13.


******************

# கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு
# Education awareness in Poet vairamuthu poems

ஏ.சிவசங்கரி | A. Sivasangari

*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு மகளிர் கலைக்கல்லூரி, சேலம் -8*
Premalathajawahar29@gmail.com, https://orcid.org/0000-0002-7746-0035

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாறு சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாறுடையதாகவும் இதற்கு முன் பரந்துபட்ட படைப்புகளை உடையதாகவும் உள்ளது. தமிழ் இலக்கியம் சங்க கால இலக்கியம், இடைக்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என மூவகையுடைத்து. இதில் தற்கால இலக்கியங்களில் ஒன்றான புதுக்கவிதையில் கவியரசு வைரமுத்து கவிதைகளில் கல்வி விழிப்புணர்வு பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. அரசின் கல்விக் கொள்கைகள் மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டே செயல்படுத்தப்படுகின்றன. இதைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மூன்று தரப்பாருக்கு உள்ளது. முதலில் ஆசிரியர். அடுத்து பெற்றோர். மூன்றாவது மாணவர். வைரமுத்துவின் பார்வையில் இவை ஆராயப்படுகின்றன.

**Abstract**

The history of Tamil literature is about three thousand years old and has a wide range of works before it. Tamil literature is divided into three types as Sangam period literature, medieval

literature and contemporary literature. This article sets out to explore educational awareness in the poems of Kaviyarasu Vairamuthu in one of the contemporary literatures. Government education policies are implemented with the progress of the people in mind. It is the responsibility of the three parties to bring this about. First the teacher. Next parents. Third student. These are explored from Vairamuthu's point of view.

**திறவுச்சொற்கள் (Keywords):** கல்வி, வகுப்பறை, ஆங்கிலக்கல்வி, பாடத்திட்டம், தேர்வு, வேலைவாய்ப்பு, Keywords, Education, English medium, syllabus, exam, Employment

## ஆசிரியர்

கல்வி கற்றதன் பயன் அதனை மற்றவர்களுக்குக் கற்றுத் தருவதே. எனவேதான் அன்ன சத்திரம் வைத்தலை விட, ஆலயம் கட்டுவதை விட மிகப் புண்ணியச் செயல் கல்லாத ஒருவனைக் கற்றவனாக்குவதே என்கிறார் பாரதியார். மாணவர்களை நூறு சதவீத தேர்ச்சிக்கு வழிவகை செய்வதற்கே பாடாய்பட வேண்டிய சூழ்நிலையில் அதிகாரிகள் தொடர்ச்சியாகப் புள்ளிவிவரங்களைக் கேட்கும்பொழுது அதில் ஆசிரியர்கள் ஈடுபடுகின்றனர். மீண்டும் மீண்டும் பல வகையான புள்ளி விவரங்களைக் கேட்கும் பொழுது, மாணவர்களுக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தைப் புள்ளி விவரங்கள் சேகரித்து உரிய வடிவத்தில் தருவதில் செலவிடுகின்றனர். மேலும் இதுபோன்ற வேலைகளில் நேரத்தைச் செலவிடுவதால் பாடம் நடத்துவதற்குரிய ஈடுபாட்டை இழக்கிறார்கள். சோர்வடைந்து விடுகிறார்கள். பள்ளிச் சூழலோ கல்லூரிச் சூழலோ இருதரப்பிலும் இம்மாதிரியான இடர்ப்பாடுகளுக்கு ஆசிரியர்கள் ஆளாகின்றனர். இதனால் மாணவர்களுக்கு உரிய பாடங்களைச் சொல்லித்தர இயலாத சூழல் ஏற்படுகிறது. பாடத்திட்டங்களோ மிகுதி. சொல்லித்தரும் நேரமோ குறைவு என்ற நிலை வரும்போது மாணவர்கள்இடர்ப்படுகின்றனர். மேலும் ஆசிரியர் பிற பணியில் ஈடுபடும் பொழுது வகுப்பு நேரங்களில் மாணவர்கள் சுதந்திரமாய் இருந்து பழகிவிடுகிறார்கள். இதனால் மாணவர்கள் தவறிழைக்கும் பொழுதோ, குறைவான மதிப்பெண்களைப் பெறும்போதோ சில சூழ்நிலையில் கண்டிக்க இயலா சூழலுக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுகின்றனர். அப்படிக் கண்டித்தாலும் தகவல் அறியும் சட்டத்தை நினைத்து மனம் திறந்து செயல்பட முடியாத நிலை உள்ளது. கல்லூரி மாணவர்களுக்குத் தகவல் அறியும் சட்டம் என்பது பல சூழலில் உண்மையாக கை கொடுத்தாலும், தவறான பாதையில் செல்லும் மாணவர்கள் கையில் கத்தியைப் போன்றே மாறி விடுகிறது. வகுப்பில் கீழ்ப்படியாத ஒழுக்கமற்ற மாணவர்களிருப்பின் பல ஆசிரியர்கள் ஒதுங்கிச் செல்லும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

> “இந்தக் கல்விமுறை
> புதைத்த பிணங்களைத்
> தோண்டியெடுத்துக் கொண்டிருக்கிறது.
> பாடத்திட்டம் படைப்பவர்கள்
> சுட்டுவிரலால்
> தொட்டு நுகர்வது மகரந்தமாம்.
> இல்லை இல்லை போன நூற்றாண்டின் புழுதி” (வைரமுத்து,2006, ப. 89)

குறிப்பிட்ட காலம்வரை (எட்டாம் வகுப்பு) அனைவரும் தேர்ச்சி என்ற முறை இருப்பதால் மீத்திறன் குறைந்த மாணவர்கள் அடுத்த வகுப்பிற்குச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் தேர்ச்சி முறைக்கு வரும்பொழுது அம்மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பெரும் சிக்கலாகிவிடுகிறார்கள். ஏனெனில் அரசோ அதிகாரிகளோ தேர்ச்சி விழுக்காட்டினைக் கேட்கும் பொழுது கல்வியில் பின்தங்கி விடும் மாணவர்கள் தேர்ச்சி விழுக்காடு குறையக் காரணமாகி விடுகிறார்கள். இது ஆசிரியர்களுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி அதிகாரிகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய சூழலை ஏற்படுத்தி விடுகிறது. இது போன்ற சங்கடங்களைத் தீர்க்க சில புத்திசாலி ஆசிரியர்கள் பெற்றோரை அழைத்து அம்மாணவர்களுக்குப் படிப்பு ஏறவில்லை என்று சொல்லி மாணவரைப் பள்ளியை விட்டே நிறுத்தச் செய்துவிடுகிறார்கள். கல்வி கற்றல், கல்வி கற்பித்தல் புனிதமான தொழிலாகக் கருதப்பட்டு, இறைவனுக்கு முதல் நிலையில் கற்பிக்கும் குரு அமர்த்தப்படுகிறார் அவர் இவ்வாறு செய்யலாமா என்றெல்லாம் கேட்பதால் பலனில்லை.

இது அனைத்து ஆசிரியர்களுக்கும் பொருந்துமா? என்றால் அதற்கு பதில் சொல்வது கொஞ்சம் சிக்கல்தான். ஏனெனில், ஒரு இருபது வருடங்களுக்கு முன்பு வரை ஆசிரியர் தொழில் மிக புனிதமான தொழில். மாணவர்களை நேசிக்கும் ஆசிரியர்களாக,- தங்கள் பிள்ளைகளைப்போல் - ஒவ்வொரு மாணவனையும் அவனது திறமைக்கேற்ப பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக்க யாரும் அலுத்துக்கொண்டதுமில்லை!. இன்றைய சூழல், அதற்கு நேர்மாறாக, ஆசிரியர் பணியிடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பணி பெற்றவர்கள் அடுத்துச் சிந்திப்பது தமக்கேற்ற வசதியான பணி இடமாக வேண்டுவதுதான், அதுவும் அரசியல்வியாதிகளின் தலையீடுகளுடன் என்பது மிக அதிகம்! கிராமப்புறப் பள்ளிகளில் பணி பெறும் ஆசிரியர், எப்பாடுபட்டாவது நகர எல்லைக்குள் பணியாற்ற விரும்புவது, தன் குடும்பச் சூழலுக்கேற்பப் பணியிடத்தை அமைத்துக் கொள்வது போன்ற விஷயங்களில் தான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். பணியிடச் சிக்கலைச் சந்திக்கும் ஆசிரியர் கல்விப்பணியில் முழுதும் ஈடுபடாத நிலை ஏற்படுகிறது. தொலை தூரத்திலிருந்து வருகின்ற நிலையில் உடலும் ஒத்துழைக்காத சூழல் பலருக்கு ஏற்படுகிறது. இந்நிலையில் மீத்திறன் குறைந்த மாணவர்களுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்துவது என்பது இயலாததாகிறது. இது ஒருபக்கம். இதற்கு மற்றொரு பக்கமும் உள்ளது. பள்ளியில் இடைநின்ற குழந்தைத் தொழிலாளர்களைக் கண்டறிந்து மீண்டும் பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவர்களின் அறிவுத் திறனுக்கேற்ப வகுப்பில் சேர்த்துவிடும் ஆசிரியர்களும் இருக்கிறார்கள். இவர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்த விரும்பினாலும் வாக்காளர் பட்டியல் விவரம் சேகரித்தல், சரிபார்த்தல் முதலான பிற துறை சார்ந்த பணிகளிலும் அரசு கேட்கும் பிற விவரங்களைச் சேகரிப்பதற்கும் பள்ளி நேரத்தைச் செலவிடுகிறார்கள். இதனாலும் மீத்திறன் குறைந்த மாணவர்கள் புறக்கணிக்கப்பட நேரிடுகிறது. ஆனால், கல்விக்கூடத்தில் என்னதான் மாணவர்களை ஆசிரியர் நெறிப்படுத்தினாலும வீட்டுச்சூழல் அவர்களை மாற்றிவிடுகிறது.

## பெற்றோர்

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோர்களும் காரணமாகின்றனர். குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோரே. பெற்றோர் குழந்தைகளின் ஆர்வத்தினைப் புரிந்து கொண்டு அவர்களுக்குக் கவனம் சிதறாத சூழலை ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் என்னதான் நல்ல சூழலை உருவாக்கித் தந்தாலும் மாணவரின் எதிர்காலம் வீட்டுச் சூழலில் தான் பெரிதும் அடங்கியுள்ளது. குடிகார அப்பா தரும் சிக்கல், உறவுகளில் ஏற்படும் சிக்கல்,

தொலைக்காட்சி தரும் சிக்கல் இவை ஒரு சில உதாரணங்கள். பெற்றோர்கள் மாணவர்களிடம் கல்விச் சூழல் குறித்தும், ஆசிரியர் குறித்தும் நல்ல எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு பெற்றோர் என்ற நிலையிலிருந்து தங்களுடைய குழந்தைகளின் அறிவை உணர்வதற்குக் கூடப் பலர் முன் வருவதில்லை என்பதை ஒரு பெற்றோர் நிலையிலிருந்து இன்றைய கல்வி முறையைக் கூர்ந்து பார்த்த வைரமுத்து.

“இந்தப் பட்டறைகளில் கூர் செய்யக்
கடப்பாறைகளைக் கொடுத்தோம் அவை
குண்டூசியாய் திரும்பின” என்றும்
“இந்தக் கல்வி முறை
புதைத்த பிணங்களைத் தோண்டியெடுத்துத்
துடைத்துக் கொண்டிருக்கிறது" (வைரமுத்து, 2006 ,ப-263)

என்றும் வேதனைப்படுகிறார். மாறாக, குடும்ப வறுமைச் சூழலைக் காரணம் காட்டி மாணவர்களை இடையிடையே பள்ளியை விட்டு நிறுத்தி வேலைக்கு அனுப்புவது, படிப்பின் பயன் குறித்து அறியாமலிருப்பது, தற்காலிக வருமானத்தைப் பெரியதாகக் கருதுவது, பள்ளியில் பிள்ளைகள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளாதது, ஆசிரியரிடம் தம் பிள்ளைகள் குறித்தும் அவர்களின் கல்வி குறித்தும் விசாரிக்காமை போன்றவை பெற்றோர் தரப்பு சிக்கல்களாகும். குடும்பச் சூழலில் இன்று உறவுமுறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முந்தைய சமுதாயத்தில் கூட்டுக்குடும்பச் சூழல் இருந்தது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, உறவுகளைப் பேணல், அனுசரித்துப் போகும் தன்மை இருந்தது. தனிக் குடும்பத்தில் சோகம், சச்சரவு, தனிமை, கணவன்-மனைவி சண்டை போன்றவற்றால் மாணவர்கள் நிம்மதியிழந்து வருகின்றனர். கூட்டுக்குடும்பச் சூழல் கல்வியை ஒரு மதிப்பாகக் கருதியது. தனிக்குடும்பச் சூழல் கல்வியை ஒரு பணி வாய்ப்பாகக் கருதுகிறது. குடும்பச் சூழலும் கல்விச் சூழலைப் பாதிக்கிறது.

**மாணவன்**

மூன்றாவது தரப்பு மாணவர்கள், கற்றலில் பின்தங்கிய மாணவர்கள் தனிக்கவனம் செலுத்தப்படாத சூழலில் வகுப்புச் சூழலுக்கு அந்நியமாகின்றனர். அதிக எண்ணிக்கையிலமைந்த மாணவர்களிருப்பின் இம்மாதிரியான மாணவர்கள் ஓரங்கட்டப்படுகின்றனர். அல்லது இவர்களாகவே ஒதுங்கி விடுகின்றனர். குடும்பச் சூழல் வறுமையுற்றிருப்பின், பெற்றோர் கல்லாமை நிறைந்திருப்பின் இம்மாணவர்கள் நிலை மேலும் மோசமாகிறது. வீட்டில் ஒழுக்கம் பற்றி எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும், பள்ளியில் கற்றுக் கொள்ளும் ஒழுக்கம் தான் இறுதிவரை கைகொடுக்கும். கோயில் இல்லா ஊரில் குடி இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் பள்ளி இல்லா ஊரில் குடியிருப்பதால், எதிர்காலச் சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள். நான், எனது என்ற எண்ணம் நீங்கவும், ஏழை, பணக்காரன் என்ற பேதம் மறையவும் பள்ளிப்படிப்பு உதவுகிறது. ஆடிப்பட்டம் தேடி விதை என்று நம் முன்னோர்கள் அனுபவப் பாடத்தினால் சொல்லிச் சென்றார்கள்.‘வைரமுத்து கவிதைகள்’ என்ற கவிதைத் தொகுப்பில் ‘அவனுக்கே அந்நியமானான்’ என்ற தலைப்பிட்ட கவிதையில் கல்வி குறித்த அவரது பார்வைகள் பதிவாகியுள்ளன.

“பள்ளி செல்லும் சிறுவன்

ஒவ்வொரு விடியலிலும்
தான் நாடு கடத்தப்படுவதாய்
நசிந்து போகிறான்" (வைரமுத்து, 2006, பக்.261)

என்ற வரிகளில் பள்ளி செல்லுவது என்பது மாணவனது சுதந்திரத்தைக் கட்டிப்போடுவதாகவும் எல்லா உறவுகளிடமிருந்தும் அவனைப் பிரித்துத் தனிமைப்படுத்துவதாகவும் மாணவன் எண்ணுவதாகப் பதிவு செய்கிறார். இது நடைமுறை உண்மைதான். பிறந்த குழந்தைக்கு ஐந்து வயது முடிந்த பின்னரே தொடக்கக் கல்விக்கு அனுப்பி வைத்தனர். அதுவரை குழந்தை, வீட்டில் பலருடனும் இணைந்து வாழும் சூழல், தெருவில் விளையாடுவது, வாழ்க்கைப் பாடத்தை மூத்தோர்களிடம் கதை வழியாகக் கேட்பது என வளர்ந்து வந்தது. தற்போது இரண்டு வயது முடிந்த உடனேயே விளையாட, பால்வாடி, கிண்டர்கார்டன் என்ற பெயரில் பள்ளிக்கு அனுப்பும் சூழல் நிலவுகிறது. இதனால் குழந்தை மன உளைச்சலுக்கு ஆளாகி, அன்பை, அரவணைப்பை இழக்கிறது. கண்டிப்பு, கறார், கட்டுப்படுத்தப்படல், தண்டனைகள் எனத் தேவையற்றவைகளைத் திணித்து அவர்களை முடமாக்கி விடுகிறோம். இன்றைய கல்வி மழலைப் பருவம் முடியும் முன்பே தொடங்கி விடுகிறது என்பதால் இதுவும் ஒருவகைத் திணிப்பாகவே கருதப்படுகிறது. உரிய பருவத்தில் அவர்களைப் பள்ளியில் சேர்ப்பதே மாணவர்களை முழுமையுடையவர்களாக உருவாக்கும். கல்வியைத் திணித்துக் குழந்தைகளை அச்சுறுத்தி வளர்ப்பதால் குழந்தைகள் இறுதி வரை வாழத்தெரியாமல் வாழ்க்கை பிடிக்காமல், ஏதோ பிறந்தோம், ஏனோ வாழ்கிறோம் என்று பிடிப்பற்று வாழ்வதைப் படம் பிடிக்கிறார்.

'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை'- கல்வி, குறள்.400

என்ற அய்யன் வள்ளுவன் கூறியது போல், இவ்வுலகில் ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே; மற்ற எந்தச் செல்வமும் கல்விக்கு ஒப்பான செல்வம் இல்லை என்ற மேன்மை பொருந்தியதான அக்கல்வி பள்ளி என்ற நிலையில் தொடங்குகிறது.

"அந்தச் சிறு பறவைகளின் சிறகுகளை
கொள்ளிக் கட்டைகளாலா கோதி விடுவது" (வைரமுத்து, 2006, பக்.262)

என்ற வரிகளில், மாணவர்கள்- சிறு பறவைகளுக்கும் அவர்களின் மன உணர்வுகள் இறக்கைகளுக்கும், கட்டாயக் கல்விமுறை கொள்ளிக் கட்டைகளுக்கும் உவமானங்களாக உணர்த்துகிறார். கவிஞருடைய இந்த வெளிப்பாடு, கல்வி மீதான அவருடைய பார்வையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. கல்விக் கூடங்களிலும், இல்லங்களிலும் குழந்தைகள் விரும்பும் சூழல் இல்லாமல் போவதற்குக் காரணம் அவர்களின் மீதான பாடத் திணிப்பு தான். ஒரு மாணவன் என்னவாக வேண்டும் என்று பெற்றோர் தீர்மானித்து அதை நோக்கி அவனை நகர்த்துகிறார்கள். நல்ல கல்வியைத் தருவது மட்டுமே பெற்றோர் கடமை. என்னவாக வேண்டுமென்பது அவனுடைய திறமையைப் பொறுத்தது.

“ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது" என்று முன்னால் குடியரசுத் தலைவர் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளார். ஆனால் கவியரசு வைரமுத்து இன்றைய வகுப்பறையைத் தம் எழுத்துக்களால் படம் பிடிக்கிறார். கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல செய்திகளைத் திணிக்கக் கூடியதாக இருத்தல் கூடாது.

அவ்வாறு திணிக்கப்படும் செய்திகள் வாழ்நாள் முழுவதும் அவனோடு ஒன்றாமல் இருந்து கொண்டு தொல்லை தருமேயன்றிப் பயன் தருவதில்லை. ஊக்கத்தையும், ஒழுக்கத்தையும், ஒன்றுதலையும் தராத கல்வி மாணவரிடையே தாழ்வு மனப்பான்மையையே ஏற்படுத்தும்

'அவர்களோடு சேர்ந்து துக்கம் கொண்டாடத்தான்
வகுப்பறைகளின் சுவர்கள் கரும்பலகையை நெஞ்சில்
நிரந்தரமாய் அணிந்தனவோ?"( வைரமுத்து, 2006, பக்.262)

கருப்பு வில்லைத் துணியைத் துக்கம் காட்ட அணிந்து கொள்வது வழக்கம். அதுபோல மாணவர்களின் துக்கம் காட்டும் விதமாக வகுப்பறைகளில் கரும்பலகைகள் உள்ளன என இன்றைய கல்வி முறை கடினமாக இருப்பது போலவும் பொருத்தமற்றதாக இருப்பது போலவும் உள்ளது என வாதிடுகிறார். தற்காலக் கல்வி முறையில் கற்றல் என்பது இனிமை தருவதாக இல்லை. இன்னல் தருவதாக உள்ளது என்ற கோணத்தில் கவிஞர் தன் கல்வி குறித்த சிந்தனைகளை வெளிப்படுத்துகிறார். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியில் தான் உள்ளது. இந்நிலையில் ஐந்தாம் வகுப்பு வரை தேர்வு எழுதாத மாணவர்கள் ஆறாம் வகுப்பிற்குச் சென்ற பின்னர்த் தேர்வு எழுதச் சிரமப்படுவார்கள். அது மட்டுமன்றி அவர்கள் எந்த அடிப்படையில் கல்வி கற்றார்கள் என்பது பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் தெரிய வாய்ப்பில்லை. எனவே, கல்வி முறையில் தேர்வு என்பது தேவைதான். உயர்கல்வி சிறப்பாகவும், தரமாகவும் அமைய வேண்டும். தேர்வென்பதே இல்லாமல் அனைவரும் தேர்ச்சி என்பது ஆசிரியர் கற்பிக்காமல் இருப்பதற்கும் வழி செய்கிறது. தேர்வு என்ற இலக்கு, கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் ஆசிரியர்களும் மாணவர்களைப் படிக்கச் சொல்லி ஊக்கப்படுத்த வாய்ப்பில்லை. அனைவரும் தேர்ச்சி என்பதால் மாணவர்களின் படிக்கும் ஆர்வம் குறைந்து விடுகிறது இதனால் கல்வியில் அடிப்படைச் செய்திகளைக் கூட அறியாமல் அடுத்த வகுப்பிற்குச் செல்கின்றனர். அடுத்த சில வரிகளில்

"அவர்கள் முளையில்விதையைப் போல்
தூவப்பட வேண்டிய அறிவுகணியைப் போல்
அறையப் படுகிறது" - என்று பதிவு செய்கிறார். (வைரமுத்து, 2006, பக்.262)

இன்றைய கல்விமுறை மாணவர்களுக்குப் பூந்தோட்டமாக இல்லாமல் போராட்டமாக இருப்பதை இக்கவிதைகள் கூறுகின்றன. இந்நிலை அவர்களது வளர்ச்சியில் உறுதுணை செய்யாது பாலைவனம் போன்று வாழ்வு மாறி விடுமோ என அஞ்சுகிறார்.

"பள்ளிக்கல்வியின் திருப்தியற்ற தரத்திற்குப் பல காரணிகள். 1.அதிக அளவிலான பள்ளிகள், பள்ளிக்கெனப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்ற விதிகளையும், தரத்தையும் பின்பற்றாமல் இருத்தல். 2.மாணவர் ஆசிரியர் வராதிருத்தல். 3.ஆசிரியரின் தூண்டுதலுக்கும் பயிற்சிக்குமான அதிக இடைவெளி. 4. ஆசிரியரின் தரம் மற்றும் செயல்பாடுகளில் குறைகளை உண்டு பண்ணுகிறது." (அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ், 2021) குருகுல முறையில் குருவின் வேலையே, ஒரு மாணவர் எதையெல்லாம் உண்மையென்று நம்பி வந்திருக்கிறானோ அதையெல்லாம் அழிப்பது மற்றும் சுயமாகச் சிந்திக்க வைப்பது என்ற அளவில் இருந்தது. திறமையை வளர்ப்பது எப்படியெனப் பாடம் நடத்தவில்லை. இயல்பாகவே ஒரு மாணவன் சூழலிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு தன் திறமையை வளர்த்துக் கொண்டான். அதற்கேற்ப அவன் தன்னை வடிவமைத்துக் கொண்டான்.

ஆனால், தற்போதைய கல்வி முறை பெற்றோர் ஒரு மாணவனை என்னவாக்க விரும்புகிறாரோ அதைப் போலவே உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது. பண்டைய குருகுலங்களில் குருவிடம் மாணவர்களை ஒப்படைத்து விடுவார்கள். பெற்றோர் தலையீடு இருப்பதில்லை. ஆனால் தற்போது பெற்றோரின் தலையீடு மிகுதியாக இருக்கிறது. விதை தூவப்படுதல் என்பது வளர்ச்சி ஏற்படும் ஒரு நிலை. ஆணி அறையப்படுகிறது என்பது வளர்ச்சியைத் தடை செய்யும் என்ற நிலை. அறிவு என்பது வளர்ச்சிக்கு அடிப்படை. மாணவர் அறிவு தூண்டடப்படுதலும் துலங்குதலும் இன்றி முடக்கிவிடப்பட்டுள்ள கல்விமுறையைச் சாடுகிறார்.

"மனப்பாட மந்திரங்களைச் சரியாக உச்சரித்தால்தான்
சரஸ்வதி வரந்தரச் சம்மதிப்பாளாம்
தேர்வுக் கூடமென்னும் நரகச் சுரங்கந்தான்
சொர்க்கத்திற்குச் செல்லும் சுருக்கு வழியாம்"( வைரமுத்து, 2006, பக்.264)

என்ற கவிதையடிகளில் மனப்பாட முறை என்பதே இன்றுள்ளது. சிந்தனையற்ற கல்வி மனனம் செய்து நெட்டுருப் போடும் கல்வி என மதிப்பெண் நோக்கில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

இன்றைய தேர்வு முறை ஒருவனின் தன்னம்பிக்கையை இழக்க வைத்து முடமாக்கி விடுகிறது. பள்ளிக்கூடம் செல்வதையே குழந்தைகள் வெறுக்கிறார்கள். மாணவர்களின் மூளையை மழுங்கடிக்கும் கல்வி முறை அமைப்பே சமூகத்தில் நிலவுகிறது. எனவே தான், கவிஞர் வைரமுத்து,

“பாலகர்கள்
சிலேட்டின் ஒரு பாகத்தை
எச்சிலாலும்
மறுபக்கத்தைக் கண்ணீராலும்
துடைத்தழிக்கிறார்கள்" (2004, ப-261) என்கிறார்.

இன்றைய கல்விச் சூழல் எப்படியிருக்கிறதோ, அப்படியே நாளைய சமுதாயம் இருக்கும் என்பதை அனைவரும் உணர வேண்டும். கடுமையாக நடத்தல், குற்றம் கூறுதல், அவசரப் படுத்துதல், சொந்தப் பொருத்தப்பாடு போன்றவை இளையோரிடம் மாறுபாடுகளை ஏற்படுத்துவதால் அவர்கள் வெறுப்பு அடைகின்றனர். இதுபோன்ற நிலை தொடர்ந்து நீடிக்கும் பொழுது, சிறுவர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்படும் இளங்குற்றவாளிகளாக மாற்றும் அடைகிறார்கள்.

மதிப்பெண்கள் மட்டும் ஒருவனை மனிதனாக ஆக்குவது இல்லை. உண்மையான கல்வி என்பது ஒவ்வொரு காரியத்திற்கும் மற்றவர்களை எதிர்பார்த்தோ, மற்றவர்களின் ஆதிக்கத்தில் இருந்தோ தனக்கு மற்றவர்கள் வழிகாட்ட வேண்டிய நிலையிலோ இல்லாமல் முழுச் சுதந்திரத்தோடு கூடிய அறிவோடு வாழத் தகுதியுடையவனாக்குவது. இந்தச் சமுதாயத்தை மாற்றுவதற்கு ஏற்றவனாக ஒருவனை உருவாக்க வேண்டிய கல்வி ஒருவனைத் தவறான பாதையில் இட்டுச் செல்ல காரணமாகிறது. ஒழுக்கம், நாணய., நேர்மை, பொறுமை, சகிப்புத் தன்மை, சுய நலமின்மை, உதவும் மனப்பான்மை முதலான சிறந்த குணங்களை உருவாக்க வேண்டும். கல்வி என்பது மனம் உள்பட நமது உணர்வுக்

கருவிகளைச் சரியான முறையில் உபயோகிக்கக் கற்றுக் கொள்வதாகும். இத்தகைய சூழலை உருவாக்காமல் தேர்வு முறையினை ஏற்படுத்தி அதில் வெற்றி பெறுபவரே வாழ்வில் வெற்றி பெற்றவர் என்பது போன்ற மாயையை இன்றைய கல்வி சூழல் உருவாக்கி வருகிறது.

ஐரோப்பாவின் வருகைக்குப் பிறகு அடிநிலை, இடைநிலை நிர்வாகத்திற்குத் தேவையான அலுவலர்களை உருவாக்கினர். கணிதம், ஆங்கிலத்தின் தேவை கருதி நிறுவனக் கல்வி முறையைப் புகுத்தி, அதில் சான்றிதழ் பெற்றவருக்கே வேலை என்ற சூழலை உருவாக்கினர். இதனால் குருகுலக்கல்வி முறை மெல்ல மெல்ல தளர்ந்து நலிந்து ஒழிந்தது. புத்திசாலியான, சிந்தனை திறன் கொண்ட இந்தியர்கள் வேலைவாய்ப்பு என்ற மாயைக்கு ஆளாகி, ஆங்கிலக்கல்வி முறைக்கு அடிமையாகி நடை-உடை-பாவனைகளில் அவர்களைப் போலவே மாற்றம் கொண்டு அவர்களிடம் வேலைக்கு அடிமையாகி இன்றுவரை அந்த அடிமைத்தளை மாறாமல் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால்தான் இன்றைய நிறுவனக்கல்வி பயிலும் மாணவர்களிடம் கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்ற மூன்று தகுதிகளும் இருப்பதில்லை. கற்பிக்கப்படும் நேரத்தில் சக மாணவனுடன் உரையாடுதல், செல்பேசி பயன்படுத்தல், உணவு உண்ணல், இடையே வெளியே எழுந்து செல்லுதல், ஆசிரியரை மதித்து நடக்காமை, குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்றன இன்றைய கல்வி முறையில் படித்து வெளிவந்த மாணவர்களிடம் உள்ளன. வேலைவாய்ப்பு நிறுவனங்கள், அறிவு, மனப்பான்மை, திறமை, நடத்தை போன்றவற்றை எதிர்பார்க்கிறது. இதையேதான் அன்றைய குருகுலங்கள் கற்றுக் கொடுத்தன. தற்காலக் கல்வி நிறுவனங்கள் இதைக் கருத்தில் கொண்டு மாணவர்களை உருவாக்க வேண்டும். அன்பு, அறிவு, ஆற்றல் நல்கி ஒரு குழந்தையை மனிதனாக்கும் கல்வி இன்று இயந்திரமாக்கும் கல்வியாக மாறிவிட்டது.

'மனித வாழ்வினை மேம்படுத்தி நல்ல ஒழுக்கத்தையும் மனவலிமையையும் விரிந்த அறிவையும் சுயவலிமையையும் தருவது கல்வியாகும்" என்கிறார் முனைவர் செல்வ சுப்ரமணியம் ராமையா, ப-48)) கல்வி ஏற்பாட்டைச் செயல்படுத்துவது அதன் வழியாக அமையும் பாடத்திட்டமேயாகும் எந்தெந்த வகுப்பில் எந்தெந்த அளவு பாடஅறிவு வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தெந்த அளவு பாட அறிவு வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தெந்த திறன்களும் வளர்க்கப்பட வேண்டும் என்றும் இது வரையறுத்துக் கூறுகின்றது. ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய உள்ளடக்கத்தைப் பட்டியலிட்டுத் தருகின்றது. மாணவர்களது அடையும் மதிப்பீடு செய்வதற்கான தேர்வு முறைகளையும் அமைத்துத் தருகின்றது. கல்வி இலக்கு அல்லது நோக்கத்தை அடையும் வழிமுறைகளே குறிக்கோள்கள் எனப்படும். நோக்கம் ஒவ்வொன்றையும் எய்திடப் பல குறிக்கோள்கள் வேண்டும். இவ்வாறு குறிக்கோள்களைத் தனித்தோ, பாடப்பொருள் பகுதியோடு இணைத்தோ பாடத்திட்டம் தரும். இன்றைய பாடத்திட்டங்களும் ஒரு வகையில் காரணமாக உள்ளது. உயர்ந்த குறிக்கோள்களை ஒட்டியதாக அமைய வேண்டும். மனிதனும் வரலாற்று அனுபவங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைப் பாடமாக்க வேண்டும். உடல், உள்ளம், சமூக நன்னெறி ஆகியவை வளரப் பாடத்திட்டம் உதவும் வகையிலிருக்க வேண்டும். ஆனால், பாடத் திட்டம் எவ்வாறு உள்ளது என்பதை, பாடத்திட்டம் படைப்பவர்கள்

"சுட்டு விரல்களால் தொட்டு நுகர்வது
மகரந்தமாம்
இல்லை.....
இல்லை....

அது போன நூற்றாண்டின் புழுதி' (வைரமுத்து, 2006, பக்.-263)

கல்வி ஒருவனிடத்தில் ஒருமைப்பாட்டை வளர்த்து இயற்கையோடும் பிரபஞ்சத் தோடும் ஒன்றி வாழ வழிவகுக்க வேண்டும். இதன் மூலம் தன்னைத் தான் உணரும் சக்தியை ஒரு மனிதன் பெறுகிறான். இத்தகைய ஆற்றல் வாய்ந்த கல்வித் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். மாணவர்கள் கடின உழைப்பால் கற்க விரும்பாமை, தன்னம்பிக்கை இல்லாமை, புரியாமல் கற்பது, ஆசிரியரோடு முரண்படுவது, கீழ்ப்படியாமை போன்றவை மாணவர் தரப்பிலான சிக்கல்கள். தற்கால மாணவர்கள் தொலைதொடர்பு சாதனங்களை மிகுதியும் பயன்படுத்துகிறார்கள். வகுப்பறையில் பின்னால் அமர்ந்து கொண்டு மின்னஞ்சல் அனுப்புவது, இடையிடையே வகுப்பிலுள்ள யாருக்காவது தொலைபேசி அழைப்புகள் விடுப்பது, படம் பார்ப்பது முதலான சேட்டைகளில் ஈடுபடுகின்றனர். இவர்கள் எட்டாம் வகுப்பிலிருந்தே இது போன்ற செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. கல்லூரிக்கு வந்தவுடன் முழுச் சுதந்திரம் பெற்று விட்டதாகக் கருதுகிறார்கள்.

பாடப்புத்தகம் வாங்குகிறார்களோ இல்லையோ புதிதாக செல்பேசிகளை வாங்கியபடியே இருக்கிறார்கள். ஒரு சில ஆசிரியர்கள் கண்டிக்கும் பொழுது அதை அக்கணமே துடைத்தெறிந்து விட்டு அடுத்த ஆசிரியரின் வகுப்பில் மீண்டும் சேட்டையை ஆரம்பிக்கிறார்கள். இந்த வகை மாணவர்கள் திரைப்படங்களில் வரக்கூடிய எதிர் நிலை ஹீரோக்களால் பாதிக்கப்பட்டவர்கள். இவர்களுடைய ஆடை அலங்காரங்களிலிருந்து இவர்களை வெளிப்படையாக அறியலாம். இப்படிப்பட்ட மாணவர்களுக்கு உரிய ஆலோசனையும் அறிவுரையும் தரக் கூடிய நிலை உள்ளது. எனவே ஆசிரியர்கள் மற்றொரு வகையில் பெற்றோர்களாகவும் செயல்பட வேண்டிய நிலையில் உள்ளனர். வீட்டிலேயே தங்கள் பிள்ளைகள் இது போன்ற ஆடைகளைப் பயன்படுத்தத் தொடங்கும் போது பெற்றோர்கள் கண்டித்துத் திருத்த முயல வேண்டும். கல்வியறிவற்ற ஏழைகளின் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகள் படிக்கச் செல்வதையே பெருமையாக நினைப்பதால் இத்தகைய மாற்றங்களைப் பெரிதுபடுத்துவதில்லை. இப்பிள்ளைகள் பெற்றோரின் கனவையும் தங்கள் எதிர்காலத்தையும் சேர்த்துச் சிதைத்து விடுகிறார்கள். இன்றைய தேர்வு முறை ஒருவனின் தன்னம்பிக்கையை இழக்க வைத்து முடமாக்கி விடுகிறது. பள்ளிக்கூடம் செல்வதையே குழந்தைகள் வெறுக்கிறார்கள். பள்ளிக் கூடங்களின் நிலை இது என்றால் பல்கலைக் கழகங்களின் நிலை என்ன என எண்ணுகையில்

"இந்தப் பல்கலைக்கழகங்கள்
வேலையில்லாதவர்களை
உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளா?" (வைரமுத்து, 2006, பக்.264)

என்று வினா எழுப்புகிறார். பொருள் உற்பத்தி போல மாணவர்கள் உற்பத்தி செய்யப்படுகிறார்கள் என்று சுட்டுகிறார். கல்வித்தரம் பற்றிய கவலை யாருக்கும் இல்லை என்பதே அடுத்த வரிகளில் கூறுகிறார்;

"இந்தக் கல்வியால் லாபம்
மூக்குக் கண்ணாடியில்
மூலதனம் போட்டவனுக்குத்தான்" (வைரமுத்து, 2006, பக்.264)

எனக் கல்விபெற்ற மாணவனுக்குக் கல்வியால் எவ்வித இலாபமும் இல்லை என்கிறார்.

"மூளையின் பயன்படுத்தாத பரப்புகளைக்
கத்தரித்து எடுத்துவிட்டது இந்தக் கல்வி"(வைரமுத்து, 2006, பக்.266)

என்று சுயசிந்தனையற்ற கல்வி இன்றைய கல்வி எனப் பதிவு செய்கிறார். புத்தகங்களின் சுமைமட்டும் ஏராளம். முதுகில் சுமை ஏற்றப்படுகிறது தாராளம். ஆனால் மூளையில் ஏற்றப்படுகிறதா என்றால் வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் தெரியும். இவ்விதமாகப் பள்ளிக்கூடங்கள் முதல் கல்லூரி உள்ளிட்ட பல்கலைக் கழகங்கள் வரையிலும் கல்வி என்பது வாழ்வுக்கு உதவாததாய் இருப்பதாய்க் குமுறுகிறார். வாழ்வை ஒட்டிய பாடத்திட்டக் கல்வியே பயனுள்ள கல்வி என உணர்த்துகிறார். அக்கல்விமுறையும் தாய்மொழி வழியே நடைபெறல் நல்லது என்கிறார். "அவன் கலைமகளுக்குப் பாடஞ் சொல்லுகிறான்"என்ற தலைப்பிட்ட கவிதையில்,

"படிப்பை முடித்துவிட்டுப் பாதை தெரியாத பட்டதாரிகள்" (வைரமுத்து, 2006, பக்.26)'

நூல் எவ்வளவு நுண்மையானதாக இருந்தாலும் ஆசான் எவ்வளவு நுண்மையாகக் கற்பிப்பினும், கற்பவனின் வேட்கையளவு, முயற்சியளவு, உணர்திறன் அளவு ஆகிய இவற்றின் அடிப்படையிலேயே கல்விநலன் அமையும்"(மா. தாமரைச்செல்வி, 2019). "வேலையில்லா இந்த இளைஞர்கள் சிம்மாசனம் கேட்கவில்லை. வேலை என்ற ஊன்றுகோல் கேட்டுத்தான் ஓலமிடுகிறார்கள். அவர்கள் இப்போது வாழ்வதெல்லாம் வாக்காளப் பட்டியலில் மட்டும் தான். அதிலும் சிலர் விடுபடப் போகிறார்கள். இத்தகைய நிலைமைக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடியவர்கள் ஆட்சியாளர்களே என்று எச்சரிக்கை விடுப்பதாய் அமைவதைக் காணலாம்." ( அ. கார்ட்டர் ஆரோக்கியராஜ், 2021)

"வாழ்க்கைக்குள் முக்குளிக்கச் சொல்லித் தராத
இந்தக் கல்வி முத்துக்களென்று
குமிழிகளைத் தானே நோக்கச் சொல்கிறது"( வைரமுத்து, 2006, பக் 21)

என்று பட்டதாரியின் வாழ்வு கல்வியால் முன்னேற்றம் ஏற்படாது என்று கங்கணம் கூறுகிறார்.

"பள்ளிக்கூடத்தில் உனக்கு
எழுத்துக்களின் கட்டாய அறிமுகந்தான்"(வைரமுத்து, 2006, பக்.259)

"வாழ்க்கையை வாசிக்க நீ
தெருவுக்குத் தானே திரும்பி வரவேண்டும்"( வைரமுத்து, 2006, பக்.259)

என்று மீண்டும், கல்வி முறையைச் சாடிப் பாடுகிறார் கவிஞர். இது போன்ற நிலை தொடர்ந்து நீடிக்கும் பொழுது, சிறுவர்கள் மனநிலையில் மாற்றம் ஏற்படும் இளங்குற்றவாளிகளாக மாற்றும் அடைகிறார்கள். பள்ளியில் புறக்கணிப்பு, பெற்றோரின் சிடுசிடுப்பு, சகமாணவர்களின் ஏளனப்பார்வை போன்றை அவனை அந்நியமாக்கி விடுகின்றன. பள்ளியும், ஆசிரியரும் வெறுப்பை ஏற்படுத்தும் போது திசை மாற்றம் ஏற்பட்டு முறை தவறிப் போகிறார்கள். கண் முன்னே வீணாகிப் போய்க் கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தைக் கண்டு தம்மளவில் ஆசிரியர்கள் திருத்த முயன்றாலும் ஒரு சில மாணவர்களே உணர்ந்து நலவழியடைகின்றனர். சில கல்லூரி மாணவர்கள் படித்தால்

வேலை கிடைக்கப் போகிறதா என்று எதிர் கேள்விகள் கேட்டு, படித்தாலும் வேலையில்லை, படிக்காவிட்டாலும் வேலையில்லை அதற்கு ஓரளவு படித்தால் போதாதா என்று எதிர் கேள்விகள் கேட்கின்றனர். சமூகம், கல்வி என்பது மதிப்பு சார்ந்தது என்ற மனநிலையிலிருந்து வேலை சார்ந்தது என்றே அவர்கள் மனத்தில் பதிவை ஏற்படுத்தி வைத்திருக்கிறது.

இப்படி இவர் இலக்கியம் காட்டும் சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏதும் நிகழுகிறதா என வினாவுமிடத்து எப்போதும் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றன எனலாம். "கல்வி இன்றைய நடைமுறைகளை உள்ளடக்கியதாகவும், நாளைய தலைமுறைக்குப் பயன்தரக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும். முதியவர்களுக்குப் படிப்பினையும், சிறியவர்களுக்குத் தூண்டுதலையும் ஏற்படுத்த வேண்டும். பாடத்திட்டங்களை வயதிற்கேற்றாற்போல் மாற்றி அமைக்க வேண்டும். வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தை உள்வாங்கிக் கண்டுபிடிப்புகளை ஆதரிக்க வேண்டும். இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் சுய அறிவை வெளிக்கொணரும் கல்வி வேண்டும்." (முனைவர் மு. நாகபாண்டி, 2019)"வகுப்பறையில் கற்பித்தல் செயற்பாடுகளில் மிகக்குறைந்த விருப்பத்துடன் ஈடுபடுகின்ற மாணவர்களின் நடத்தைகளை முதலில் அவதானிக்க வேண்டும். எனவே சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் கற்றலை வழங்கும் ஆசிரியர்கள் ஒழுக்கரீதியான நடத்தைகளை இனம்கண்டு அவர்களில் கவனம் வைத்து கற்றலில் உள்வாங்க வேண்டும். இதன் பொருட்டு விழுமியக் கருத்துக்களை வழங்குதல், நற்சிந்தனைகள் வழங்குதல், வழிகாட்டல் ஆலோசகரின் கருத்துக்களை வழங்குதஙல, விசேட கற்பித்தல் வழங்குதல் போன்ற பிரச்சினைகளை இனங்கண்டு குறைத்துக் கொள்ள உதவும்." (Jesuiya Dilani 2017 )வைரமுத்து கவிதை 33 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்றது. ஆனால் இன்று சில செயல்பாடுகளில் கீழ்வரும் நிலைகளில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

தொடக்கக் கல்வி அளவில் புத்தகச் சுமை இன்று குறைக்கப்பட்டுள்ளது. மும்முறை பாடத் திட்டம் என்ற திட்டத்தின் மூலம் புத்தகம் குறைத்து, சுமை தளர்த்தப்பட்டுள்ளது.

தேர்வு எனும் அச்சம் தொடக்க நிலைக் கல்வியில் இப்போது இல்லை. 'செயல்வழிக் கற்றல்' என்ற முறையில் அவரவர் நிலையில் அவரவர் கற்றல் அட்டைகள் கொண்டு கல்வி கற்றுப் பாடத்திறன் முடிந்தால் தேர்வு அட்டையை எடுத்து தேர்வு எழுதலாம் என்ற நிலை தற்போது அரசுப் பள்ளிகளில் நடைமுறையில் உள்ளது.

பல்கலைக்கழகங்களில் இன்று செயல்வழிக் கற்றலும், களப்பயணக் கற்றலும் பின்பற்றப்படுகின்றன. நிர்வாகம் சார்ந்த படிப்பு என்றாலும் பொறியியல் கல்வி என்றாலும் கற்கும்போதே செயல்திட்டம் மேற்கொள்வதும் களப்பயணம் சென்று கற்றல் தெளிவு பெற்றலும், தொழில்முறைப் பார்வை - தொழிற்சாலை சென்று மேற்கொண்டு அதுபற்றித் தெளிவுக் கட்டுரைகள் ஒப்படைவு செய்வதும் இன்றைய கல்வியில் நடைமுறையில் உள்ளன.

இவையெல்லாம் இன்றைய சமுதாயத்தில் கல்வியில் ஏற்பட்ட விழிப்புணர்வுகள் தாம்.

**துணைநின்றவை**

- வைரமுத்து, (2006), வைரமுத்து கவிதைகள் (கி.பி.2000 வரை கவிஞர் எழுதிய கவிதைகளுள் அறிஞர்கள் தேர்ந்தெடுத்த தொகுப்பு), சூர்யா வெளியீடு, டிரஸ்ட்புரம், சென்னை. எட்டாம் பதிப்பு - 2006. முதற்பதிப்பு: சூலை 2000
- **செல்வ சுப்ரமணியம் ராமையா, (ஜீலை 2021), சங்க இலக்கியத்தில் கல்வி (**Education in Caṅkam Literature **தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN : 2636-946X **&** Print ISSN : 2286-8379 **) Vol. 10 No. 1 (2021), 2021-07-20 ப.48**
- கார்ட்டர் ஆரோக்கியராஜ் அ., (ஜீலை 2021), கல்வி எனது உரிமை (Education my Right) தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN :2636-946X** & **Print ISSN : 2286-8379** ) Vol. 10 No. 1 (2021) , 2021-07-20 ப.122
- கார்ட்டர் ஆரோக்கியராஜ் அ., (ஜீலை 2021), கல்வி எனது உரிமை (Education my Right) தமிழ்ப்பேராய்வு ஆய்விதழ் Journal of peraivu (**eISSN :2636-946X** & **Print ISSN : 2286-8379** ) Vol. 10 No. 1 (2021) , 2021-07-20 ப.123
- நாகபாண்டி மு., (ஜீலை 2019), வைரமுத்து கவிதைகளில் கல்விச் சிந்தனைகள் (Education thoughts in vairamathu poems) சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் http://www.shanlaxjournals.in/ மலர் 3, இதழ் 3, 2019. ISSN 2454 -3993. ப.49
- தாமரைச்செல்வி மா., (அக்டோபர் 2019), வள்ளவர் காட்டும் கல்விக் கொள்கை – ஓர் ஆய்வு (Education policy in valluvar) அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் https://www.aranejournal.com/article/5830 ISSN 2582-399x
- Jesuiya Dilani, (October 2017), பாடசாலை மாணவர்களின் ஒழுக்க ரீதியான பிரச்சினைகள் வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம், (The impact of school students' moral problems on effective learning), BODHI International Journal of Research in Humanities, Arts and Science online, Peer reviewed, Refereed and Quarterly Journal No : 1 October 2017 ISSN : 2456 CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS) www.crrps.in | www.bodhijournals.com Research in Humanities, Arts and Science and Quarterly Journal 2456-5571 ப.80.


******************

# கற்றல் கற்பித்தலில் 'எக்ஸ்ப்ளைன் எவ்ரிதிங்' செயலியின் பயன்பாடு The Use Of Explain Everything In Learning Process

த. நந்தினி | D. Nanthini

Student of Tamil Department, Sultan Idris Education University, Malaysia
nanthinidarman99@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

Explain Everything என்பது கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் ஒரு செயலியாகும். Explain Everything செயலி எல்லா சாதனங்களிலும் மற்றும் அனைத்து பிரபலமான கணினிகளிலும் செயல்படுகிறது. அதாவது, iOS, Chrome OS மற்றும் Android. இணைய அணுகல் மற்றும் வலை உலாவி கொண்ட நவீன சாதனம் அல்லாத சாதனங்களிலும் இதை இயக்க முடியும். கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு அடிப்படையாகத் தேவைப்படும் அனைத்து அம்சங்களையும் இந்தச் செயலி உள்ளடக்கி உள்ளது. பாரம்பரிய முறைகளான கரும்பலகை அல்லது